## கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No. 305/2011**

திருமதி. ராமாத்தாள் (P.W. –1) **13.10.2025**

<u>மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் 7 முதல் 10 மற்றும் 12 பிதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. தாவா சங்கதிகள் நான் சொல்லி தாக்கல் செய்யப்பட்டு முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்தேன் என்றால் சரி. தாவா சொத்துக்கள் என்னுடைய தகப்பனார் சுப்பையா கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றால் ஆமாம். என்னுடைய தகப்பனார் 1967 இல் இறந்து போனார் என்றால் சரி. என்னுடைய தகப்பனாருக்கு நான், ஒன்றாம் பிரதிவாதி மற்றும் ஒரு பழனிச்சாமி ஆகியோர் வாரிசுதாரர்கள் என்றால் சரி. பழனிசாமி திருமணம் ஏற்படாமல் இறந்து போனார் என்றால் சரி.

2. தாவா மூன்றாம் பிரதிவாதி என்னுடைய மகன் என்றால் சரி. இரண்டாம் பிரதிவாதி முதல் பிரதிவாதியின் கணவர் என்றால் சரி. 2,3 பிரதிவாதிகளை தாவாவில் எதற்காக சேர்த்து உள்ளேன் என்ற விவரங்கள் வழக்குரையில் மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியில்ல. சுப்பையன் பொன்னுசாமிக்கு சொத்துக்கள் எவ்வாறு பாத்தியம் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. சொத்துக்கள் அனைத்தும் எங்களுக்கு பாத்தியப்பட்டது. தாவா தாக்கல் செய்வதற்கு முன்பு தாவா பாகங்களை பொறுத்து பாகப் பிரிவினை கோரி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரி.

3. தாவா சொத்துக்கள் என்னுடைய சுவாதீனத்தில் உள்ளது என்பதற்கு வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 1960 ஆம் வருடம் என்னுடைய அப்பா உயிருடன் இருந்தபோது அவர் அவருக்காகவும் அவருடைய மகனுக்காகவும் சேர்ந்து பூமலூர் கிராமம் சர்வே எண் 89 இல் உள்ள சொத்துக்களை பழனிசாமிக்கு விற்பனை செய்து விட்டார் என்றால் தெரியாது. பழனிச்சாமி வாரிசுகள் அந்த சொத்துக்களை குமரன் கோ பங்குதாரர்கள் ராமசாமி, பழனிச்சாமி மற்றும் பெரியசாமிக்கு விற்பனை செய்து விட்டார்கள் என்றால் ஞாபகம் இல்லை. பழனிசாமி பெயருக்கு ராமசாமியும், பெரியசாமியும் கிரையம்பெபெற்ற சொத்துக்களை பொறுத்து விடுதலை ஆவணங்கள் ஏற்படுத்தி உள்ளார்கள் என்றால் ஞாபகம் இல்லை.

4. 1989 ஆம் வருடம் பழனிச்சாமி 7 முதல் 12 பிரதிவாதிகளின் தகப்பனாருக்கு கிரையம் பெற்ற சொத்துக்களை விற்பனை செய்து விட்டார்கள் என்றால் ஞாபகம் இல்லை. சொத்துக்களை கிரையம் பெற்ற 7 முதல் 12 பிரதிவாதிகளின் தகப்பனாருக்கு விற்பனை செய்த நபர்களை தாவாவில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் தெரியாது. சுப்ரமணியத்திற்கு சொத்துக்கள் எப்போது கிரயம் ஏற்பட்டது என்ற விவரங்கள் தாவா வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரி.

5. 2011 ஆம் வருடம் பெற்றதாக சொல்லும் வில்லங்கச் சான்றிதழ் தாவாவில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை பொறுத்து நானும் என்னுடைய சகோதரியும் இந்து வாரிசு உரிமைச் சட்டத்தின் படி பாகம் பெற அருகதை இல்லை என்றால் சரியல்ல. தாவா காலம் வரை தோஷத்தால் பாதிப்படைகிறது என்றால் தெரியாது. சொத்துக்களை விற்பனை

செய்த விபரங்கள் 1960 ஆம் வருடமே எனக்கு தெரியும் என்றால் ஞாபகம் இல்லை.

6. பூமலூர் கிராமம் சர்வே எண் 89 சொத்தில் 7 முதல் 10, 12, 22 முதல் 24 பிரதிவாதிகள் தான் பாதுகாப்பில் உள்ளார்கள் என்றால் தவறு. தாவாவில் விளும்புகை பரிகாரம் கோராமல் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் தாவா நிலைக்கதல்ல என்றால் சரியல்ல. அவசிய தரப்பினரையும் சேர்க்காத தோஷத்தால் பாதிப்படைகிறது என்றால் தவறு. தாவா தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் மதிப்பு சரியாக மதிப்பீடு செய்யப்பட்டு சரியான நீதிமன்ற கட்டணம் செலுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. தாவாவை விசாரணை செய்யவே இந்த நீதிமன்றத்திற்கு ஆள்வகை இல்லை என்றால் சரியல்ல. தாவா செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் தவறு.

22 முதல் 24 பிரதிவாதிகள் இதே குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்கள்.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN Digitally signed by K R KANNAN Date: 2025.10.13 17:45:20 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.

## கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No. 305/2011**

திரு.வேலுசாமி (P.W.–2) **13.10.2025**

<u>மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் 7 முதல் 10 மற்றும் 12 பிதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க சம்மன் வரவில்லை. வாதி கேட்டுக் கொண்டதற்கு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரி. ராமாத்தாள் என்னுடைய உறவினர் என்றால் ஆமாம். நான் வசிக்கும் முகவரியிலிருந்து தாவா சொத்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது என்றால் தவறு. மூன்று கிலோமீட்டர் இருக்கும். தாவா சொத்து முதலில் யாருக்கு பாத்தியும் என்று எனக்குத் தெரியாது என்றால் சரி. ஆனால் ராமாத்தாலும் லட்சுமியும் சொத்தில் இருந்தார்கள். தாவாவில் ராமாத்தாள் யாருக்கு எதிராக தாவா தாக்கல் செய்துள்ளார் என்ற விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் ஆமாம்.

2. தாவா சொத்தில் சர்வே எண் என்ன விஸ்தீரணம் என்ன என்று எனக்குத் தெரியாது என்றால் தவறு. சர்வே எண் 114, 115 தாவா சொத்து அதன் விஸ்தீரணம் தெரியாது. மேலே சொன்ன சர்வே எண் சொத்துக்களைத் தவிர வேறு சர்வே எண்கள் தெரியாது என்றால் சரி. ஆனால் சொத்துக்கள் இருந்தது. ராமாத்தாளின் தகப்பனார் உயிருடன் இருந்த போது அவருடைய சொத்துக்களை யாருக்கு விற்பனை செய்தார் என்ற விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரி. அதற்கு பிறகு ஏற்பட்ட கிரைய விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் ஆமாம்.

3. தாவா சொத்தில் ராமாத்தாள் மற்றும் லட்சுமி சுவாதினத்தில் இருந்ததற்கு ஆவணங்கள் எதுவும் நான் பார்த்ததில்லை என்றால் சரி. சர்வே எண் 89 ல் வாதியும் அவருடைய சகோதரியும் சுவாதி இனத்தில் இல்லை. 7 முதல் 10, 12, 22 முதல் 24

பிரதிவாதிகள் தான் சுவாதினத்தில் உள்ளார்கள் என்றால் வாதியும் அவருடைய சகோதரியையும் போய் வந்து கொண்டிருக்கிறார். தாவா சொத்தான சர்வே எண் 89 இல் வாதிக்கும் அவருடைய சகோதரி லட்சுமிக்கும் எந்த உரிமையும் பாத்தியமும் இல்லை என்றால் தவறு. வாதியும் ஒண்ணாம் பிரிவாரியும் என்னுடைய உறவினர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு என்னுடைய சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல

22 முதல் 24 பிரதிவாதிகள் இதே குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்கள்.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN Digitally signed by K R KANNAN Date: 2025.10.13 17:45:26 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.